DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : C**C 301/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : சுகன்யா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 27.05.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 27th **May** 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது ஓட்டப்பிடாரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது வீட்டிலிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது ஊரைச் சேர்ந்தவர். 2013 ம் வருடம் நானும் எனது குடும்பத்தாரும் எனது பூர்வீக ஊரிலிருந்து மைப்பாறைக்கு வந்து குடியேரினோம். 31.03.2014 ம் தேதி மதியம் 2.30 மணியளவில் ஆஜர் எதிரி எங்கள் வீட்டு காம்பவுண்ட் கதவை தட்டினார். அந்த நேரத்தில் என்னை தவிர்த்து வீட்டில் வேறுயாரும் இல்லை. கதவு தட்டப்பட்ட சத்தத்தை கேட்டு நான்வெளியில் வந்தேன். ஆஜர் எதிரி என்னை பார்த்து தேவிடியா மவளே புண்ட மவளே என்று அசிங்கமாக பேசி அவருடன் நான் வரவேண்டும் என்றும் அவ்வாறு நான் போகாவிட்டால் என்னை கொன்றுவிடுவதாகவும் கூறி மிரட்டினார். அவர் அவ்வாறு மிரட்டிய பிறகு நான் சத்தமிட்டு கூச்சலிட்டேன். நான் சத்தம் போட்டதை கேட்டு எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் குடியிருந்த போத்திராஜ் என்பவரும், அந்த நேரத்தில் அங்கு அருகில் இருந்த அழகர் சாமி என்பவரும் அங்கு வந்தார்கள். அவர்கள் இருவரும் ஆஜர்எதிரியை சத்தம் போட்டார்கள். அந்த நேரத்தில் கடைக்கு போயிருந்த எனது அம்மா அங்கு வந்து ஆஜர் எதிரியை பார்த்து மேலும் மேலும் எதற்காக அசிங்கபடுத்துகிறீர்கள் என்று கேட்டார். மேற்கூறிய நபர்கள் சத்தம்போட்டவுடன்

ஆஜர் எதிரி அங்கிருந்து ஓடிவிட்டார். 01.04.2014ம் தேதி மதியம் 2.30 மணியளவில் நான் திருவேங்கடம் காவல்நிலையத்தில் மேற்படி சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் கைப்பட எழுதப்பட்டு கையொப்பம் போடப்பட்டு என்னால் கொடுக்ப்பட்ட புகார்மனுதான். **அந்த புகார் மனு அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் கூறியவாறும், புகார் மனுவில் தெரிவித்துள்ளவாறும் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நடக்காத சம்பவத்தை நடந்ததாக கூறி பொய்புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியும் நானும் ஒருவரை ஒருவர் விரும்பி பதிவு திருமணம் செய்து கொண்டோம் என்றாலும், அந்த பதிவு திருமணத்தை எனது வீட்டார் ஏற்றுக் கொள்ளாததால், அந்த திருமணத்தை முறிவு செய்வதற்காக நான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றாலும, அந்த வழக்கில் ஆஜர் எதிரி ஒத்துழைப்பு அளிக்கவேண்டுமென்று அவரை வற்புறுத்தும் நோக்கத்தோடு இவ்வழக்கில் பொய்யான புகாரை கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. புகார்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களும் நான் முதல்விசாரணையில் தெரிவித்துள்ள விபரங்களும் முரணாக உள்ளன என்றால் சரியல்ல. புகார்மனுவில் ஆஜர் எதிரி எங்கள் வீட்டிற்கு வந்ததாக சொல்லப்பட்டதாக சமயத்தில் நானும் எனது அம்மாவும் வீட்டிலிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்மனுவில் கூறியுள்ளவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லைஎன்றாலும், அதனால்தான் புகார்மனுவிலும் எனது முதல் விசாரணையிலும் சம்பவ தினத்தன்று எனது அம்மா என்னுடன் இருந்தது பொறுத்து முன்னுக் பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. புகார்மனு அளிக்கும் போது நான் பதட்டத்தில் எனது அம்மா என்னுடன் இருந்ததாக தவறாக கொடுத்துவிட்டேன். 2013ம் வருடத்தில் மைப்பாறைக்கு வருவதற்கு முன்பு நானும் எனது குடும்பத்தாரும், எந்த ஊரில் இருந்தோம் என்றால் ஆமணக்குநத்தம் என்ற ஊரில் குடியிருந்தோம். சம்பவம் நடைபெறுவதற்கு முன்பு ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் ஆமணக்கு நத்தம் ஊரில் குடியிருந்தார். என்னிடம் காட்டப்படும் திருமண சான்றிதழ் எனக்கும் ஆஜர் எதிரிக்கும் இடையில் நடைபெற்ற திருமணத்தை பதிவு செய்து சிவகாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட சான்றிதழ் என்றால் சரிதான். ஆனால் மேற்படி சான்றிதழை ஆஜர் எதிரி மோசடியாக பெற்றுள்ளார். ஆஜர் எதிரி தனக்கும் வேறு பெண்ணிற்கும் திருமணம் நடக்கபோவதாக சொல்லி அந்த திருமணத்திற்கு என்னை சாட்சி கையொப்பம் போடச்சொல்லி அழைத்து சிவகாசி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியில் வைத்து எனது கையொப்பத்தை மோசடியாக பெற்று அதனடிப்படையில் திருமணம் நடைபெற்றதாக கூறி பதிவு செய்து இந்த மோசடி சான்றிதழை பெற்றுள்ளார். மேற்படி சான்றிதழை ரத்து செய்யக்கோரி அ.வ.எண்.164/2013 என்ற வழக்கை

சிவகாசி உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல்செய்தேன். **மேற்படி திருமண பதிவு சான்று எ.ம.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி அ.வ.எண்.164/2013 வழக்கில் ஒருதலைபட்ச தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். ஆஜர் எதிரி தனது மனைவி தன்னிடம் இருந்து பிரித்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அவரை தன்னுடன் சேர்த்து வைக்குமாறும் கோரி மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் எனது குடும்பத்தாருக்கு எதிராக ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்திருந்தாரா என்றால் தாக்கல் செய்திருந்தார். மேற்படி மனுவின் விசாரணைக்காக ஆஜரான நான் எனது பெற்றோருடன் செல்வதாக தெரிவித்ததால் அந்த மனு முடிக்கப்பட்டது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1 ஆவணத்தை என்னை ஏமாற்றி மோசடியாக ஆஜர் எதிரி உற்பத்தி செய்துள்ளார் என்று தெரிவித்து அவருக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார்மனு எதுவும் நான் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. எ.ம.சா.ஆ.1 ஆவணம் மோசடி ஆவணமாக இருந்திருந்தால் ஆஜர் எதிரிக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும், ஆஜர் எதிரிக்கும் எனக்கும் இடையில் இருவரின் ஒப்புதலின் பேரில் திருமணம் நடைபெற்றதால் தான் அவருக்கு எதிராக அவ்வாறு புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கின் புகாரை நான் அளிக்கும் சமயத்தில் ஆஜர் எதிரி தீயணைப்புத்துறையில் சேர்வதற்கான தேர்வில் தேர்ச்சி பெற்று பயிற்ச்சியில் இருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கின் புகார் மனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பு ஆஜர் எதிரி என்னை அவரது மனைவி என்று உரிமை கோருவது தொடர்பாக பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கும் எனக்கும் இடையில் நடந்த திருமணத்தை எனது குடும்பத்தார் ஏற்றுக்கொள்ளததால் தான் நானும் எனது குடும்பத்தாரும் எங்கள் பூர்வீக ஊரிலிருந்து மைப்பாறைக்கு குடியேறினோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்திற்கு மறுநாள் தான் புகார்மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த நாளன்று நான் அதிர்ச்சியில் இருந்ததால் நான் மறுநாள் சென்று புகார் கொடுத்தேன். நான் கூறியவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அதனால் தான் எதிரிக்கு எதிராக முன்யோசனை செய்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளுக்கு மறுநாள் புகார்மனு கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் புகார் கொடுத்தபோது என்னுடன் யார் இருந்தார் என்றால் எனது மாமா ராஜேஷ் கண்ணன் என்னுடன் இருந்தார். நான் புகார் கொடுத்த நாளான்றே போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். மேற்கண்ட ராஜேஷ் கண்ணனிடம் போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. அவர் என்னுடன் புகார் கொடுக்க மட்டும் வந்தார். இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டதிலிருந்து ஆஜர் எதிரி என்னிடம் பிரச்சனை செய்ததில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், நான் நடக்காத சம்பவத்தை பொறுத்து பொய்யாக புகார்மனு கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரி எனது ஊர்க்காரர் என்று

தெரிவித்துவிட்டு அவரது திருமணத்திற்கு சாட்சி கையொப்பம் போடச்சென்றதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி நான் பயணித்த பேருந்தில் அடிக்கடி பிரச்சனை செய்து அவ்வாறு சாட்சி கையொப்பம் போடவரவில்லை என்றால் தன்னை கேவலப்படுத்திவிடுவதாக மிரட்டி என்னை அவரது திருமணத்திற்கு சாட்சி கையொப்பம் போட வரவழைத்தார். ஆஜர் எதிரிக்கும் எனக்கும் இடையில் கடித பரிமாற்றம் இருந்தது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியும் நானும் ஒருவரை ஒருவர் விரும்பினோம் என்றாலும், எங்கள் இருவருக்கும் இடையில் கடித பரிமாற்றம் இருந்தது என்றாலும், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**